# சிந்தையின் போர்

1



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து

# அந்த எதிர்மறையான எண்ணமானது உங்களுக்குள்ளாக செல்ல ஒரு போதும் அனுமதிக்க வேண்டாம்



# செய்தி: 103 - 105 குருடனான பர்திமேயு, சான் பெர்னாண்டோ CA, 55 - 1115

*சக்கர நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு உங்களுக்கு நம்பிக்கை அற்ற நிலை என்றும், உங்களுக்கே நீங்கள் உதவி செய்து கொள்ள முடியாத நிலை என்றும் நினைக்க வேண்டாம். உங்கள் நிலை அப்படி அல்ல.*

*அந்த எதிர்மறையான எண்ணமானது உங்களுக்குள்ளாக செல்ல ஒரு போதும் அனுமதிக்க வேண்டாம்.*

*அந்த எண்ணத்தை உங்களுக்குள்ளாக நங்கூரமிட வேண்டாம்.*

அந்த எண்ணம் உங்கள் சிந்தைக்குள் ளாக சென்று வருவதை தடுக்க உங்க ளால் முடியாது (அது சரியே), ஆனால் அதை உங்கள் சிந்தைக்குள்ளாகவே நிறுத்தி விடாதீர்கள்.

ஒரு வயதான விவசாயி "பறவைகள் என் நிலத்தின் மீது பறந்து செல்வதை என்னால் தடுக்க முடியாது" என்று கூறினது போல தான், ஆனால் அவனிட மாக இரட்டைக் குழல் துப்பாக்கி இருந்தது, அப்போது அவன், "ஆனால் அவை வந்து தங்குவதை என்னால் தடுக்க முடியும்" என்று கூறினான்.

ஆகவே நீங்களும் கூட அதே காரி யத்தைச் செய்யுங்கள். நீங்களும் கூட அவ்விதம் செய்யுங்கள். பாருங்கள்?

அவைகளை தங்கவிட வேண்டாம்.

அவை அப்படியே கடந்து செல்லும் படிக்கு விட்டு விடுங்கள்.

இப்பொழுது, இதோ நீங்கள் உப யோகிக்க இருக்கின்ற துப்பாக்கி இங்கே உள்ளது. அது புதிய மற்றும் பழைய ஏற்பாடு என்னும் இரட்டைக் குழல் துப்பாக்கி, அது உபயோகிக்க மிக மிக ஆற்றல் வாய்ந்த ஒன்றாகும்.

நான் உங்களுக்கு கூறுகிறேன். அது எல்லாவற்றையும் உங்களிடமாக வராத படிக்கு தடுத்து நிறுத்தும்.



# நீங்கள் சந்தோஷமாக இருப்பதையே தேவன் விரும்புகின்றார்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 20 - இயேசுவின் உயிர்த்தெழுதல், சிக்காகோ, இல்லினாய், 56 - 0405

நீங்கள் முகத்தை சுளித்துக் கொண்டு வைத்திருக்க தேவன் விரும்புவதில்லை.

நீங்கள் சந்தோஷமாக இருப்பதையே தேவன் விரும்புகின்றார்.

சந்தோஷமாக இருக்கவே மானிட இருதயமானது உண்டாக்கப்பட்டுள்ளது.

கவலை புற்றுநோயை உண்டாக்கும்.

கோபமும் புற்றுநோயை உண்டாக்கும்.

ஆகவே ஒருக்காலும் கவலையுற்றிருக்க வேண்டாம். அவருடைய அன்பில் அப்படியே நடவுங்கள். ஆமென்.



# ஆகவே கவலையிலிருந்து நீங்கள் விலகுங்கள், விசுவாசத்தைக் கொண்டிருங்கள்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 17 - அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்ட போது, ஸ்பின்டேல், NC, 56-0420

*பாவம் மரணம் ஆகும்.*

*வியாதி பாவத்தை பின் தொடர் கின்றது.*

*கவலை பாவத்தை தொடர்ந்து வரு கின்றது.*

*கவலை எவ்வளவு பயங்கரமான ஒன்று என்று எப்போதாவது நீங்கள் கவனித்துள்ளீர்களா?*

*கவலைக்கு எந்த ஒரு பயன் தரும் மதிப்பும் இல்லை.*

சில சமயங்களுக்கு முன்னர் நகரத்தில் ஒரு மன்றத்தில் ஒரு கூட்டம் மனிதருடன் நான் பேசிக்கொண்டிருந்தேன். அப்போது நான் "அதற்கு எந்த ஒரு பயன் தரும் மதிப்பும் இல்லை ஒருக்கால் நீங்கள் காலையில் கொல்லப்படப்போகிறீர்கள் என்று இருக்குமானால், அதை குறித்து கவலைப்படுவது உங்களுக்கு எந்தவிதத்திலும் உதவி செய்யாது" என்றேன்.

அதில் ஒருவர் ஒரு மாதிரியாக கீழே நோக்கிப் பார்த்து, ஒரு விதமாக சிரிப்பதை நான் பார்த்தேன், அப்போது அந்த மனிதன் "நல்லது, விசுவாசம் என்ன செய்யும்?" என்று கேட்டார்.

அதற்கு நான் "உங்கள் மன்னிப்புக்கு அது ஒப்புதல் கையொப்பமிடும்" என்றேன்.

அது சரியே. கவலை, அதற்கு எந்த ஒரு பயன் மதிப்பீடும் கிடையாது. விசுவாசம்... ஆகவே கவலையிலிருந்து நீங்கள் விலகுங்கள், விசுவாசத்தைக் கொண்டிருங்கள்....



# ஆகவே உங்கள் பாரங்களை எல்லாம் அவர் மீது வைத்து விடுங்கள் கவலைப்படுவதை நிறுத்துங்கள்



# செய்தி: 101 அழுத்தத்தை வெளியேற்றுதல், ஜெபர்சன்வில், இண்டியானா, 62 - 0513E

*உங்கள் எல்லா பாரத்தையும் தாம் எடுத்துக் கொள்வதாக கிறிஸ்து வாக் குத்தத்தம் செய்துள்ளார்.*

*உங்கள் பாரங்களை அவர் மீது வைத்து விடுங்கள்.*


*ஆகவே நீங்கள் ஏன் எதையும் குறித்து கவலை கொள்கிறீர்கள்.*

*கவலை அழுத்தத்தை அதிகரிக்கும்; அழுத்தம் அதிகமாகும் போது வெடித்து விடும்.*

*ஆகவே உங்கள் பாரங்களை எல்லாம் அவர் மீது வைத்து விடுங்கள் கவலைப் படுவதை நிறுத்துங்கள். அது சரியே!*



# ஒரு மனிதன் இயேசு கிறிஸ்துவை கண்டடையும் வரைக்கும் அவன் தன்னுடைய சரியான மனநிலையில் முற்றிலுமாக இல்லை



# செய்தி: 30 - நான் ஏன் ஒரு பரிசுத்த உருளையனாக இருக்கிறேன், சிக்காகோ, இல்லினாய். 53 - 0830A

*மதம் உங்களை பித்துப்பிடித்தவராக பைத்தியக்காரராக ஆக்குகிறது என்று சிலர் கூறுகின்றனர்.*

*என்ன, இந்த உலகிலேயே சிறந்த ஒரு மனநிலையை கொடுக்கும் ஒன்று அது மாத்திரம் தான். அது சரியே.*

*இயேசு யாரையுமே பைத்தியமாக்க வில்லை; அவர் மனநிலை குன்றியவர் களை அந்நிலையிலிருந்து விடுவித்தார், அவர்களை சரியான மனநிலையை அடையும்படிக்கு அதை அவர்களுக்கு அளித்தார்.*

அதைத்தான் தேவனுடைய வல்லமை எப்போதுமே செய்தது; வெறிப்பிடித்த வர்களையும் இன்னும் அதைப் போன் றோர்களை விடுதலையாக்குவதை தான் அது செய்கின்றது.

அவர்களை விடுவித்து சரியான மனநிலையில் அவர்களை வைக்கும்.

ஒரு மனிதன் இயேசு கிறிஸ்துவை கண்டடையும் வரைக்கும் அவன் தன்னுடைய சரியான மனநிலையில் முற்றிலுமாக இல்லை. அவன் சரியான மனநிலையில் இல்லை.

இப்படியாக நான் கூறுவது மோசமாக இருக்கலாம். ஆனால் அதுதான் உண்மையாகும்; நாம் உண்மைகளை சந்தித்துதான் வேண்டும்.

